முதலமைச்சரின் அறிவுறுத்தலின்படி நினைவிடத்தில் மலர் அஞ்சலி:

# இமானுவேல் சேகரனாருக்கு 2 மாதங்களில் சிலை - மணிமண்டபம் திறப்பு!

## பரமக்குடியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

**பரமக்குடி, செப்.13 -**

**சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் 68ஆவது நினைவு தினத்தையொட்டி, அவரது நினைவிடத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.**



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.9.2025) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் 68ஆவது நினைவு தினத்தையொட்டி, அவரது நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

நம்முடைய சுதந்திர போராட்ட தியாகி, இந்தியாவிற்காக இராணுவத்தில் பாடுபட்டவர். சமூக நீதி போராளி. மறைந்த ஐயா இமானுவேல் சேகரனார் அவர்களுடைய 68வது நினைவு நாளையொட்டி முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு அரசின் சார்பாக நானும், கழகத்தினுடைய மூத்த அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், கழக நிர்வாகிகளும் வந்து இங்கே எங்களுடைய மரியாதையை நாங்கள் செலுத்தியுள்ளோம்.

அவருடைய புகழ் என்றென்றும் ஓங்கி நிற்கட்டும். சமூக நீதிக்காக அரும்பாடு பட்டவர். தன்னுடைய வாழ்நாள் முழுவதும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பாடுபட்டவர் இமானுவேல் சேகரனார் அவர்கள். அவருடைய குடும்பத்தினர் அவருக்கு மணிமண்டபம் கட்ட வேண்டும், சிலை வைக்க வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை வைத்திருந்தார்கள்.

சென்ற வருடமே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதற்கான உத்தரவை யிட்டார்கள். உடனடியாக 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தார்கள்.

பரமக்குடி நகராட்சி பகுதியில் அவருக்கு நினைவு மண்டபம் கட்டும் பணி கிட்டத்தட்ட 95 சதவீதம் நிறைவு பெற்ற நிலையில் நடைபெற்று வருகின்றது.

மணிமண்டபம் உள்ளே அவருடைய திருவுருவச் சிலை வைக்கின்ற இறுதிகட்டப் பணி நடைபெற்று வருகின்றது. இன்னும் 2 மாதங்களில் மணிமண்டபமும், சிலையும் திறக்கப்படும் என்ற செய்தியை நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

சுதந்திர பேராட்ட தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் புகழ் ஓங்கட்டும். அடுத்து வருகின்ற தலைமுறையினருக்கும் அவருடைய சமூக நீதி பணி, அவருடைய பெருமைகள் கொண்டு சேர்க்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கேஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பி. மூர்த்தி, திருமதி. என். கயல்விழி செல்வராஜ், டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், செ.முருகேசன், திருமதி தமிழரசி ரவிக்குமார், செ.சண்முகையா, மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜித் சிங் காலோன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

புதுக்கோட்டை, செப். 13 -



புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், கனிம வளங்கள் மற்றும் கரங்கத்துறை அமைச்சரு மான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

நாளை ( 14 09.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 3 மணியளவில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா (ஏசி) மஹாலில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம் புதுக் கோட்டை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிர மணியன் தலைமையிலும், பிற்படுத் தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் பெரியண்ணன் அரசு, முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

தொகுதி பார்வையாளர்கள் அறந்தாங்கி தொகுதி சுப.த திவாகரன், திருமயம் தொகுதி எஸ்.முத்துக்குமார், ஆலங்குடி தொகுதி எழில்மாறன் செல்வேந்திரன் ஆகியோர் பங்கேற்கிறார்கள். இந்நிகழ்வுகளில் ஒன்றிய , நகர ,பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வாக்குச் சாவடி முகவர்கள் பி.எல்.ஏ 2 ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

செப்டம்பர் 17ந்தேதி கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழா,

வாக்குச்சாவடி முன்பு உறுதிமொழி ஏற்பு, கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

திருப்பத்தூர் மாவட்டம்

# புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக்கடை!

## அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

திருப்பத்தூர், செப்.13 -

திருப்பத்தூர் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில்சௌளூர் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடையினை அ. நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.

எல்லோர்க்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சியில் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு முழுவதும் வளர்ச்சிப் பணிகள் அனைத்துத் துறைகள் வாயிலாக மக்கள் போற்றும் வகையில் நடைபெற்று வருகின்றன.

பொதுப்பணி, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலில் திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் மக்கள் தேவையறிந்து அ.நல்ல தம்பிஎம்.எல்.ஏ. அனைத்து அடிப்படைத் தேவைகளையும் நிறைவேற்றி வருகின்றார்.

அதன் தொடர்ச்சியாக திருப்பத்தூர் ஒன்றியம் புதுக்கோட்டை ஊராட்சி சௌளூர் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றி புதியதாக பகுதி நேர நியாய விலைக்கடையினை அ.நல்ல தம்பி எம்.எல்.ஏ. மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அரசு சார்பில் கூட்டுறவு சார்பதிவாளர்.திரா.தர்மேந்திரன், ஒன்றிய சேர்மென்.விஜயா அருணாசலம், துணை சேர்மன்.ஞானசேகரன், மாவட்ட கவுன்சிலர். சுபாஷ்சந்திர போஸ், அன்பழகன், ஒன்றிய துணை செயலாளர்கள். சி.கழகரசு, டி.கே.சின்னதம்பி, வாசு, பி.ஆர்.சின்னபையன், அண்ணாதுரை, சாமிநாதன் பொதுமக்கள் மற்றும் பிரதிநிதி கள், கழக முன்னோடிகள், தூய்மைப் பணியாளர்கள் என திரளாக கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு அரசின் உயரிய விருதான டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதினை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கரங்களால் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் முன்னிலையில் பெற்று வந்த, கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியம், காட்டுக்கூடலூர் கிராமத்தைச் சேர்ந்த, ஆசிரியர், முனைவர் கி.நந்தகோபால கிருஷ்ணன், கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசனிடம் காண்பித்து வாழ்த்தும் பாராட்டும் பெற்றார். நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.


